**50 சுந்தரப்பேரம்புஎய்தபடலம்**

வங்கியசேகர பாண்டினுடன் விக்ரம் சோழன் வடதிசை மன்னர் பலருடன் போரிட வந்தான். இதை அறிந்த பாண்டியன் கலக்கமுற்று, தன் துயர் துடைக்க ஐயனிடம் வேண்டினான். சோழனுடன் பாண்டியன் போர் புரியும் சமயம் தான் வந்து வெற்றி பெற துணை புரிவதாக அசரீரியாக ஒலித்தார் ஐயன். ஊரக பெரும் போர் மூண்டது. இந்த கடும் போரில் சோழனுடைய பெரும்படையை, பாண்டிய சேனை தாக்குப் பிடிக்க முடியாமல் திணறின. இத் தருணத்தில் தான் வெற்றிப் பெற்றதாக செருக்குடன் சோழன் சங்கை எடுத்து ஊதினான்.

காலம் கடத்தாமல் எம்பெருமான் வேட மன்னர் உருவம் கொண்டு பாண்டிய சேனைக்குதலைவரானார். சுந்தரேசன் என்ற தன் பெயரிட்ட கணைகளை, சோழனின் படை மீதுதொடுத்தார். ஓர் அம்பு பதினாயிரம் வீரர்களைக் கொன்றதும. ஓர் கணைக்கு இவ்வளவு சக்தியா? என்ற ஐயம் மூவியந்த சோழன், அக்கணைம அந்த அரஇத்த உஅதில் சுந்தரேசன் என்று எழு திருப்பம்மகம கண்டு, இது ஆடலரசனின் செயலே என்று உணர்ந்து, பயந்து நடுங்கினான். படைகளுடன் திரும்பினான் சோழன் வட நாட்டுப் படைகளையும்முறியடித்து சுந்தரப் பேரம்பு.வேடனாய் வகசந்நநைநஞைநைஜந்தஜயனும்பாண்டியனதுமலர்ந்தமுகம்கண்டு புன்னகைத்துஅங்கிருந்துமறைந்தருளினார். பாண்டியனும்சங்கெடுத்திஊதிதன்வெற்றியைக்கொண்டாடினான். சோமசுந்தரகடவுளுக்கு மாணிக்கத்தால் இழைக்கப்பட்ட வில்லும்சுந்த ரேசர் என்ற பெயர் எழுதிய அம்பும் படைத்து சிறப்புற நாட்டை ஆண்டு வந்தான்.

**பல்லவி**

விக்ரமசோழனுடன் வடதிசை மன்னர் பலரும்
வங்கியசேகரனுடன் போர் புரியவந்தனர்

**அனுபல்லவி**

பக்கபலமின்றி பாண்டியன் உன்னிடம்
பதறி வந்த போது விண்ணில் அபயம் என்று சொன்னாய்

**சரணம்**

கோரமாய் போர் புரிந்து வெற்றி சங்கை ஊதிய
சோழனை எதிர்த்திட வேடனாய் நின்றீர்
வீரர்களைக் கொன்ற கணையில் சுந்தரேசன் பெயர் கண்டு
சோழன் ஓட பாண்டியனும் வெற்றிச் சங்கை ஊதினான்